# செந்தமிழ்

தொகுதி: 92 அக்டோபர் 1998 பகுதி: 10

திங்கள் இதழ்

முதன்மை ஆசிரியர் **மா. தனுக்கோடிபாண்டியன்** பி.ஏ., பி.எல.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் செ கந்தசாமி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ தட்சிணாமூர்த்தி
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர்.

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் ச. மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பேரறிஞர் சி கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் கு துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.அ மணவாளன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பெரும்புலவர் இரா இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேராசிரியர் ந. பொன்னப்பன்
மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் ந மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

பேரறிஞர் எஸ் எம். கமால்
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.

பேரறிஞர் ஈ.கே. இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பேராசிரியர் சே அரிராமநாதன்
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


முதன்மை ஆசிரியர் ***மா.தனுக்கோடி பாண்டியன்*** பி.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

ஆசிரியர் பேரறிஞர் ***நா. பாலுசாமி***

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.

# பொருளடக்கம்


1. **எல்லோருக்கும் தொல்காப்பியம்** *337*
*பேரறிஞர் ந. பாலுசாமி*

2. **திருவள்ளுவரும் சமரச சன்மார்க்கமும்** *340*
*ந.மு. வேங்கடசாமி நாட்டார்*

3. **கள்ளும் சோறும்** *349*
*பேரறிஞர் அ.மா. பரிமணம், தஞ்சாவூர்*

4. **அழகியல் நோக்கில் புறநானூற்றுப் பாடல்கள்** *358*
*பேரறிஞர் தெ. திருஞானமூர்த்தி, மேலைச்சிவபுரி*

5. **முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் சமயம்** *365*
*பேரறிஞர் பெ. சுயம்பு*

*(முன் இதழ்த்தொடர்ச்சி)*

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

– பேரறிஞர் நா. பாலுசாமி

*(தொல் – சொல் – வினையியல்)*

## *சூத்திரம் 227*

***(செய்யும் என்னும் வாய்பாட்டு வினை)***

***பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை***
***அவ்வயின் மூன்றும் நிகழும் காலத்துச்***
***செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா.***

*(ப.ரை)* பல்லோர் படர்க்கை – பலரைக் குறிக்கும் படர்க்கையும், முன்னிலை தன்மை – முன்னிலையும் தன்மையும், அ வயின் மூன்றும் – ஆகிய மூன்றும், நிகழ்காலத்து – நிகழ்காலத்தில், செய்யும் என்னும் கிளவியொடு – செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல்லோடு, கொள்ளா – பொருந்தா.

நிகழ்காலம் காட்டும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று படர்க்கையில் பலர்பாலுக்கு மட்டில் வாராது; தன்மை முன்னிலைகளில் முழுமையாக வாராது.

*(வி.ரை)* பல்லோர் – உயர்திணைப் பலர்பால். படர்க்கை – மூன்றாமிடம். வயின் – இடம். கொள்ளா – பொருந்தா. செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல் நிகழ்காலம் குறிக்கும் என்பது கூறவே, நிகழும் காலத்துச் செய்யும் எனச் சூத்திரம் செய்தார் ஆசிரியர். எதிர்காலத்திற்கும் இச்சொல் வரலாம் என்பர் அறிஞர் பூவராகம் பிள்ளை. செய்யும் என்னும் முற்று பலர்பாலுக்கு வாராது என்பதால், ஏனைய ஆண், பெண், ஒன்று, பல என்னும் நான்கு பால்களுக்கும் பொருந்திவரும் என்பதாயிற்று.

செய்யும் என்னும் பெயரெச்சமும் நிகழ்வு, எதிர்வு ஆகிய இரண்டு காலங்களிலும் வரும். தன்மையிலும் முன்னிலையிலும் வாராது.

(எ—கா) அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும் எனப் படர்க்கையில் ஆண், பெண் பால்களை உயர்திணையிலும், ஒன்று, பல என அஃறிணையிலும் வருவதாயிற்று.

## சூத்திரம் 228

(வினையெச்ச வாய்பாடுகள்)

*செய்து செய்யூச் செய்பு செய்தெனச்*
*செயியர் செய்யிய செயின் செயச் செயற்கு என*
*அவ்வகை ஒன்பதும் வினைஎஞ்சு கிளவி.*

(ப.உரை) செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு – இவ்வொன்பதும் வாய்பாட்டு வினை எச்சங்கள்.

(வி.உரை) மேலே முன்னிலை முதலிய விரவு வினைச் சொற்களைத் தொடுத்துச் சுட்டிப் பின்னர் வியங்கோள், செய்யும் என் பெயரெச்சம் ஆகியவற்றுக்குச் சிறப்பு விதிகள் கூறிய தொல்காப்பியர் இச்சூத்திரத்தில் வினை எச்சங்களின் வாய்பாடுகள் பற்றி விவரித்துள்ளார். செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கும் பின்னர் சிறப்பு விதி கூறுவர்.

(எ.கா) படித்து முடித்தான் – செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். உண்ணூஉவந்தான் – செய்யூ என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நகுபு வந்து – செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். உண்டெனப் பசிதீர்ந்தது – செய்தென, உண்ணியர் வந்தார் – செய்யியர், உண்ணிய வந்தார் – செய்யிய மழை பெய்யின் குளம் நிறையும் – செயின், மழை பெய்யக் குளம் நிறைந்தது – செய, உணற்கு வந்தான் – செயற்கு என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்.

இங்குக் கூறிய வாய்பாட்டு வினை எச்சங்களுள், உண்ணூ, நகுபு, உண்ணியர், உண்ணிய, என்பன இலக்கிய வழக்கு; ஏனைய இலக்கிய வழக்கிலும் உலகவழக்கிலும் பயின்று வருவன.

இனி, செய்து, செய்யூ, செய்தென என்பன இறந்தகாலம் பற்றிவரும்; செய்பு(செய்யா நின்று எனப்பொருள்பட்டு) நிகழ்காலம் காட்டும்: செய்யிய, செய்யியர், செயற்கு – எதிர்காலம் காட்டும்: செய, செயின் – மூன்றுகாலமும் காட்டும்.

(தொடரும்)

## மக்கள் தொகை

தமிழகம் – 6 கோடி (ஏறத்தாழ)

உலக நாடுகள் – 200 கோடி (ஏறத்தாழ)

6 கோடிக்கு மேல் மக்கள் தொகை உள்ள நாடுகள் – 20

1 கோடிக்கும் குறைந்த மக்கள் தொகை நாடுகள் – 120

1/2 கோடிக்கும் குறைந்த மக்கள் தொகை நாடுகள் – 90

# திருவள்ளுவரும் சமரச சன்மார்க்கமும்

– ந.மு. வேங்கடசாமி நாட்டார்

உத்தம நாகரிகம் வாய்ந்த இத் தமிழுலகின்கண் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்குமுன் ஞானதிவாகரனாய் விளங்கிய ஆசிரியர் திருவள்ளுவரின் பெருமையும், அவர் அருளிய திருக்குறளென்னுந் தெய்வப்பனுவலினருமையும், நன்மக்களொவ்வொருவ ருள்ளத்தையும் வளம்படுத்தி மகிழ்செய்வவாயின. அன்றுமுதல் ஒவ்வொரு சாதியாளரும், ஒவ்வொரு சமயிகளும் திருக்குறளைத் தங்கள் தங்கள் நூலென்றும், வள்ளுவரைத் தம்மவர் தம்மவரென்றும், கூறிப்போதருகின்றனர். தமிழ்மொழிவழங்கம் பிறதேயமாந்தரும், நம் தமிழ்மறையை நன்கு படித்தும் தத்தம் பாஷைகளில் மொழிபெயர்த்தும், ஆராக்காதலுடன் பாராட்டிவருவாராயின், அது நம்மாலெத்துணை பாராட்டப்படுவதொன்றாகும்? உலகில் மக்களெனப்பிறந்தா ரொவ்வொருவரும் அதனைப் பொதுவே போற்றிப் புகழ்ந்து கூறிவரினும் தமிழிலக்கணவிலக்கிய வலிகொண்டு ஐயந்திரிபறக் கற்றுக்கேட்டுணரும் பெருந்தவமுடையார்க்கே அதனருமை பெருமைகள் அளவுபடாவாய்த் தோன்றுவனவாம்.

திருக்குறள் மதுரையி லரங்கேறியகாலத்தில் நிகரற்றகல்வியாளராய்த் தமிழுக்கரசராய் வீற்றிருந்த சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரும் செவியாரக்கேட்டு மனமார வுவந்து வாயாரப்பகர்ந்துள்ள பாடல்களினால் அது பிறந்தபொழுதே யாட்சிசெலுத்தும் பெருமதிப்புற்றமை விளங்கும். அவர்கள் இதனை வெதமென்றும், வேதத்தின் மிக்கதென்றும், அமுதென்றும், அமுதத்தின் மிக்க சுவையுள்ளதென்றும், அகவிருள் நீக்குந்திவாகரனென்றும், எல்லாப் பொருளுமிதன்பாலுள்ளனவென்றும், இதன்பால் லில்லாதவெப்பொருளுமில்லையென்றும், இந்நூ லொன்றே

கற்கத்தகுந்ததென்றும், மற்றும் பலவாறும் பாராட்டிக் கூறியிருக்கின்றனர்.

இது அக்காலத்திற்றானே அசைக்கவொண்ணாத பிரபலபிரமாண நூலாயிற்றென்பது கடைச்சங்கப்புலவரு ளொருவராகிய சாத்தனார் தாமியற்றிய மணிமேகலைக் காப்பியத்துள், தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப்பெய்யும் பெருமழையென்றவப், பொய்யில் புலவன் பொருளுரைதேறாய் எனக் கூறியிருத்தலால் நன்கு விளங்கும்.

இது, யாவருமொருசேரப் புகழ் மத்துணைப் பாடெய்துதற்குக் காரணம், குன்றக்கூறல் முதலிய குற்றமொன்றுமின்றிச் சுருங்கச்சொல்லல் முதலிய அழகெல்லாங் கொண்டு விளங்குதலும், எல்லாருக்கு மொத்த பொதுநீதிகளைப் பசுமரத்தாணி அறைந்தாற்போற் பதியக்கூறுதலுமாம். உலகிலுள்ள மாந்தரனைவரும் செந்நெறி கடைப்பிடித் துய்யவேண்டுமென்னும் பெருங்கருணையுடைய வள்ளலாகிய நம் மாசிரியர் சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களின் சாரமான பொருல்களையெல்லா மெடுத்து ஒவ்வொருசாரார்க்கேயுரிய சிறுபான்மையான சிறப்பியல்புகளையொழித்துத் தூய்மை செய்து எல்லோருக்குமொத்தனவும் உறுதிபயப்பனவுமான நீதிகளைத் திரட்டி வெளிபடுப்பாராயினர். இவ்வுண்மை:-

*சமயக்கணக்கர்மதிவழிகூறா*
*துலகியல்கூறிப்பொருளிதுவென்ற*
*வள்ளுவன்.* எனக் கல்லாடத்தும்,

*ஒன்றேபொருளென்னின்வேறென்ப*
*அன்றென்பவாறுசமயத்தார் – நன்றென்ன*
*எப்பாலவருமியைபவேவள்ளுவனார்*
*முப்பான்மொழிந்தமொழி.*

எனத் திருவள்ளுவமாலையினுமுள்ள கல்லாடர் திருவாக்குகளால் விளக்கமுறும்.

மனுமுதலிய ஸ்மிருதிகளிலும் மகாபாரத்திலுமுள்ள எத்தனையோ பல நீதிகளை நாயனார் தழுவியுள்ளாரென்பது உண்மையே. உதாரணமாக:-

1. அவிசொரிந்தாயிரம்வேட்டலினொன்றன்
உயிர்செகுத்துண்ணாமைநன்று.

2. மழித்தலுநீட்டலும்வேண்டாவுலகம்
பழித்ததொழித்துவிடின்.

3. நன்றாகுமாக்கம்பெரிதெனினுஞ்சான்றோர்க்குக்
கொன்றாகுமாக்கங்கடை.

4. கொலையிற்கொடியாரைவேந்தொறுத்தல்பைங்கூழ்
களைகட்டதனொடுநேர்.

5. ஈன்றாள்பசிகாண்பானாயினுஞ்செய்யற்க
சான்றோர்பழிக்கும்வினை.

என்பன மனுஸ்மிருதியின் பொருளைக்கொண்டு வந்தன காண்க.

அங்ஙனம் ஸ்மிருதியாசாரங்களைக் கொள்ளுமிடத்தும் அதிகாரி பேதம், முதலியனபற்றி அதனைத் தூய்மைப் படுத்துரைத்தலுமுணர்க.

இனி, இவர்பொருட்பாகுபாட்டினை அறம் பொருளின்பமென வடநூல்வழக்குப்பற்றியோதினா ரெனப் பரிமேலழகருரைத்தார். எனினும் தமிழ்வழக்குப்பற்றி யோதினாரெனல் பெரிதும் பொருத்தமாம். என்னை? வடநூல் வழக்குப்பற்றி யோதினாரெனில், வீட்டுப்பாலெனவொன்று கூறல்வேண்டும்; அங்ஙனங்கூறாமையானும், பொருளினை அகம்புறமெனப் பகுத்து அகத்தின்கணின்பமும், புறத்தின் பகுதியாகிய காஞ்சித்திணைக் கண்ணே அவற்றது நிலையின்மைகூறுந் தமிழ்வழக்குப்பற்றி ஆசிரியர் வீடொழிய ஏனைமூன்றுமேகூறி அவற்றின் நிலைமையைப் புறத்தைச் சாராவைத்தமையானு மென்பது. இவ்வுண்மை பொருளதிகாரவாராய்ச்சியுடையார்க்கு நன்குபுலனாகும். வீட்டினை யிலக்கண வகையாற்கூறுதல் தமிழ்வழக்கன் றென்பதனைப் பெயர் கொடாமையானும், முதற்கண் வைக்கற்பாலதாகிய வின்பத்தினை யிறுதிக்கண் வைத்தமையானும் பரிமேலழகர், அயநூல்வழக்குப் பற்றியோதினாரெனக்கூறியதுஞ் சாலும்.

உலகியலின் வழுவாதொழுகிப் பின்னவற்றது நிலையின்மைகண்டு பிறப்பினையஞ்சித் துறவெய்தி யவாவறுத்தாரால் ஒருதலையானெய் தற்பாலதாகிய வீட்டினைப் பண்டைத்தமிழ்மக்கள் இலக்கணவகையாற் கூறாதொழிந்தது ஜனசமூகத்தின் சமாதானவாழ்க்கையை விரும்பிய அன்னவரின் நாகரிகமுதிர்ச்சியை விளக்குமேயன்றிப் பிறிதில்லை. ஞானசாஸ்திரம் பயிலத்தொடங்கிய விக்காலத்துச் சமாதானமின்மை மிக்குவருதல் கண்கூடாகலான். எனினும், மறுவில்செய்தி மூவகைக்காலமும், நெறியினாற்றியவறிவ ராகுஞ் செந்நாப்போதார் வீட்டியலினைச் சிறிதுங் கூறாதொழிந்தாருமல்லர்.

இனி, தெய்வப்புலவர் எல்லாருக்குமொத்த நீதிகளைக்கூறிப் போந்தாரெனவே அவர்தம் ஒரு சமயத்திற் கட்டுண்டவரன்றி யெல்லாச் சமயங்களையு மொருங்கொப்பக் கொண்டவராலெனின், அது பொருந்தாது. உலகிலே யொருபடித்தாக முழுது மொத்திருப்பதில்லை. உலகிலுள்ளமாந்த ரொவ்வொருவரும் அறிவுமுதலியவற்றில் வேறுபட்டவராயேயிருப்பர். அவர்கள் தம்முடைய அறிவாதியவற்றின் வன்மை மென்மைகட்கேற்ப வெவ்வேறுவகையான உத்தியொகங்களை மேற்கொண்டு ஏற்றமுந் தாழ்வுமான பலபேறுடையராதலுமுண்மை. அங்ஙனமே அனைவரும் கன்மத்தாலும், அறிவாலு மொத்தவராவராகார். அவற்றிற்கேற்ப அவர்க ணின்றொழுகத்தக்க சமயங்கள் பலவு முலகிற் கின்றியமையாதனவே. அவையெல்லா மொத்தனவாகா. வள்ளுவனாரும் ஒரு சமயத்தை யடைந்தேயிருந்திருக்க வேண்டும். ஆயின் சமரசசன்மார்க்கம் என்பதென்னையெனின், அது வேரெச்சமயத்தையும் விரோதியாத நலப்பாடமைந்த மெய்ச்சமயமென்றே கொள்ளத்தகும். இவ்வுண்மை கருதியன்றே!

*சன்மார்க்கஞானமதின்பொருளும்வீறு*
*சமயசங்கேதப்பொருளுந்தானொன்றாகப்*
*பன்மார்க்கநெறிமுறையினுலுங்கண்டதில்லை*
*பகர்வரியதில்லைமன்றுட்பார்த்தபோதங்*

*கென்மார்க்கநெஞ்சமுளவெனக்குந்தானே*
*கண்டவுடனானந்தங்காண்டலாகும்.*

என்னுந் திருவாக்கெழுவதாயிற்று, அவரவர் கன்மபரிபாகத்திற்கேற்பப் பல மதங்கள் வேண்டுவனவே யென்றும், எல்லாமதங்களும் மேலான ஒப்பற்ற லக்ஷியத்தையடைதற்கமைந்த சோபானங்களேயென்றும், தத்தம் நெறியின் வழுவாதொழுகினாரனைவரும் அதனையுடைதல் ஒருதலை என்றும், எல்லாருக்குஞ் சித்தமுத்திகளைத் தரத் தக்க தனிமுதற்பரம்பொருளொன்றேயென்று முணர்ந்து ஒவ்வொருவரும். தத்தம்நெறியின் வழுவிக்கேடுறாவண்ண முபதேசித்தலே சன்மார்க்கரின் கடமையாகும். அத்தகையரே நம் நாயனாருமென்க.

நாயனார், பௌத்தர், சைனர் முதலியோரிலொருவராகார் என்பதைப் பற்றிச் சேதுஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீமத்ரா இராகவையங்காரவர்கள் தக்க நியாயங்காட்டி முன்னரே எழுதியிருத்தலின், அவர்வேதவழிப்பட்ட ஓர்மதத்தினரென்பதே துணிபு. நாயனார் சைவரல்லரென்றாவது, வைணவரல்ல ரென்றாவது கூறுதற்குத்தக்க ஆதாரமொன்றுமேயில்லை. அவர் வேதத்தையும் வேதவழித்தான வேள்வியையுங் குறித்திருக்கிறார். திருமாலுலகளந்தது, இந்திரன் சாபமெய்தியது, முதலிய புராணகதைகளையுங் கூறியிருக்கிறார். அந்தணர் முதலிய நான்கு வருணத்தையு மங்கீகரித்திருக்கிறார். பிரமசரியம், முதலிய நால்வகை நிலையினை மேற்கொண்டுமுள்ளார். அந்தணர்க்கு ஆறுதொழிலுண்டென்பதும், அவர் வேதத்தை மறக்கலாகாதென்பதும், அவர் ஒழுக்கத்திற்றவறின் வருணமே கெட்டு விடுமென்பதும் அவராற் கூறப்பட்டுள்ளன. அரசன் கொடுங்கோலனாயின் அவனாட்டிற் பருவமழைபெய்யாதென்று சொல்லியுள்ளார். வணிகத்திற்குப் பிறர்பொருளையுந் தம்பொருள் போற்பார்க்கும் நீதி வேண்டுமென்றனர். எல்லாத் தொழிலினும் உழவுதொழிலையே தலையாய தொழிலெனப்புகன்றனர். தேவர்கட்குப் பூசனையுந் திருவிழாக்களுஞ் செய்ய வெண்டுமென்பதும், பிதிரர் கடன் இறுக்க வேண்டுமென்பதும் ஆசிரியர்க்குடன்பாடே பஞ்சதன்

மாத்திரை முதலிய தத்துவங்களை யாராய்ச்சி செய்யின், பிரபஞ்ச உண்மையறியப்படுமென்று கூறுகிறார். வாத பித்த சிலேத்துமங்கள் இன்ன காலத்திற் றுன்பஞ் செய்யுமென்ற மருத்துவ நூற் கொள்கையை எடுத்துக்காட்டுகிறார். ஒருபிறப்பிற் செய்தவினையின்பயன் எழுபிறப்புவரையிற் றொடருமென்பது மவர்கருத்தாகும். உரியவிடங்களிற் சைவாகமங்கலின் கருத்துக்களைத் தழுவுகிறார். இவற்றிற்கெல்லா முதாரணம் திருக்குறளி லாண்டாண்டுக்காண்க.

இனி, பகவான், வாலறிவன், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அறவாழியந்தணன், எண்குணத்தான், பற்றற்றான், மெய்ப்பொருள், உள்ளது, செம்பொருள் என்ற பெயர்களாற் பசுபதியாகிய தனிமுதல்வனை உணர்த்தி அவனிலக்கணங்களைத் தொகுத்தும் வகுத்துங் கூறியருளினார். தனக்குவமையில்லாதான் எனவே முதல்வன் ஒருவனே என்பது ஆசிரியர் கருத்தாயிற்று. பரிமேலழகரும் பொருள்சேர் புகழ் என்பதற்கு இறைமைக்குணங்க ளிலராயினாரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவைமுற்றவுமுடைய இறைவன் புகழே, பொருள் சேர்புகழெனப் பட்டதென்றும், எண்குணங்களிவையென வுணர்த்தியபின்னர், இவ்வாறுசைவாகமத்திற் கூறப்பட்டது என்றுங் கூறுவாராயினார். தெய்வப்புலவர் இங்ஙனங் கடவுளைக் கூறியவிடங்களில் ஓரிடத்தேனும் எம்மதத்தினரும் விரோதியாவாறு குறிப்பித்துச் சென்றமையே அவரது சமரசநிலையினை நன்கு விளக்குவதாயிற்று.

முதற்குறளினாலே உலகிற்கு நிமித்தகராணனாகிய பதியும், அவனாற் காரியப்படும் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையும், அப்பதியையும், பிரபஞ்சத்தையும் அறிந்தனுபவிக்கும் பசுக்களுமுளவென்பது பெறப்பட்டது. இருள்சேரிருவினையும், மருளானாமாணாப்பிறப்பு என்னும் பிரமாணங்களால் இருள், மருள் என்னும் பரியாய நாமங்களையுடைய அவிச்சை அல்லது ஆணவமலம் ஒன்றுண்டென்பதும், அதனைப்பற்றியே இருவினைகள் நிகழுமென்பதும், இருவினையும் பிறவிக்கேது

வெண்பதும், பிறவியுள்ளகாறும் துன்பம் ஒருதலையானுண்டென்பதும் பெறப்பட்டன. பிறவிப் பெருங்கடனீந்துவர்நீந்தா, ரிறைவனடி சேராதார் என்னுங் குறளாலும், காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றிவருதலின், பிறவிப் பொருங்கடல் என்றார் என்னுமுரையாலும் இருவினையும் பிறவியும் தம் முட் காரணகாரியமாய் அநாதிதொட்டே வருகினறன வென்பதும், இறைவனடியைச் சேர்ந்தே பிறவியறுக்க வேண்டுமென்பதும் பெறப்பட்டன. வினையின் வந்ததுவினைக்கு விளைவாயது என்பதுங் காண்க.

பொய்யில் புலவராகிய நம்மாசிரியர் உலகியனீதிகளையும் கடவுட்டிருநாமங்களையும் அனைவருமொப்புமாறு கூறியதுபோலவே விடுபேற்றிற்குச் சிறந்த சாதனமாகிய பிறவேதுக்களையுங்கூறிப் போதருமாற்றல் நம்மாற் புகழப்படுவதன்றோ?

1. நில்லாத வற்றை நிலையின் வென்றுணரும்
   புல்லறி வாண்மை கடை

2. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
   குயர்ந்த வுலகம் புகும்

3. பொருளல்ல வற்றைப் பொருளெ ன்றுணரு
   மருளான்ா மாணாப் பிறப்பு

4. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம ஃதுண்டேற்
   றவா அதுமேன் மேல்வரும்

என்னுந் திருவாக்குகளைச் சைவர், வைணவர், வேதாந்திகள், பௌத்தர், சைனர் முதலியோரில் உண்மையெனப் போற்றாதா ரியாவர்? இங்ஙனம் யாவர்க்கும் பொதுவே கூறிச் செல்லும் நயம், வேண்டும் பனுவற்றுணிவு. நூலோர் தொகுத்தவற்றுள், பல்லாற்றாற்றேரினும் என்னும் பிரமாணங்களாலும் வலியுறுவதாகும். தெய்வப் புலவரதுண்மைக் கருத்தையுணர்ந்த ஆசிரியர் ஒன்றையொன்றொவ்வாத சமய நூல்களெல்லாவற்றிற்கும்

இஃதொத்த துணிவென்பது பெற்றாம். என்றும், எல்லா நூல்களினும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பாகலின் ஈண்டும் பொதுப்பட, நூலோர் என்றும், ஒன்றையொன்றொவ்வாத சமய நெறிகள் எல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே என்றும், மயங்கியவழிப் பேய்த் தேரிற் புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்த வழிக் கயிற்றிலரவு போலக் கெடுதலிற் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டுவருதலாற் கணந்தோறும் பிறந்திறக்கு மென்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும், ஒருவாற்றான் வேறுபடாமையும் உடைமையின் நிலையுறு தலும், நிலையாமையும் ஒருங்கேயுடையவென்பாரும் எனப்பொருட் பெற்றி கூறுவார் பலதிறத்தாராவார்; அவரெல்லார்க்கு மவற்றது நிலையாமையுடம் பாடாகலின் ஈண்டு அதனையே கூறுகின்றார். என்றும் உரை விரிப்பாராயினார்.

உலகப் பொருள்களின் நிலையாமையை உணர வேண்டும் என்பதும், உணர்ந்ததுணையானே அவற்றின் மேலுள்ள பற்றுக்களையும் தாம் நுகர்தற்கு வைத்திருந்த அப்பொருள்களையும் ஒருங்கே துறக்க வேண்டும் என்பதும், அங்ஙனந் துறததற் குபாயம் பற்றற்றான் பற்றினைப் பற்றித் தியான சமாதிகளைச் செய்தலே என்பதும், அவ்வாறு பற்றுக்களை விட்டு மனம் ஒருவழிப்பட்டவிடத்தும் சந்தேக விபரீதங்களைப் போக்கி மெய் உணர்ந்தாலன்றிப் பயனில்லை என்பதும், மெய்யுணர்வினிலக்கணமாவது காணப்படுகிற எந்தப் பொருளினிடத்தும் காரண காரியமிரண்டுமின்றி முடிவாய்நிற்கும் முதற்பொருளை காண்டலே என்பதும், அவ்வாறு பதிஞானங்கைவரற்குக் கேள்வி விமரிசம் பாவனையென்ற மூன்றுபாயங்களைச் செய்ய வேண்டுமென்பதும், அவற்றினைச் செய்து பதியையுணர்ந்து சோகம் பாவனை செய்யவே அவிச்சை வலிகுன்றிச் சஞ்சிதகன்ம மொழியுமென்பதும், பின் ஆகாமியம் ஏறாதென்பதும், பின்னுந்தடையாயுள்ளது பிராரத்துவ வாசனையொன்றே என்பதும், அதனையும் இடையறாத மெய்ப்

பொருளுணர்வாலறுத்துத் திருவருளில் அதீதப்பட்டு நிற்றலாகியவதுவே பரமுத்தியென்பதும் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரால் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

நாயனாருக்குப் பிற்காலத்தவர்களில் திருக்குறளின் சொல்லையும், பொருளையுமெடுத்துக் கோத்துத் தத்தம் நூல்களையழகுபடுத்நாத வாசிரியர் யாருமில்லை. சைவத்திருமுறைகளிலும், வைணவப் பிரபந்தத்திலும் திருக்குறளின் சொற்பொருள்களேறுவவாயின. தமிழின்கட் சைவசித்தாந்த சாஸ்திரங்களை யருளிச் செய்த திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார், சீகாழிக்கண்ணுடைய வள்ளலார். கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் முதலாயினாரெல்லாம் திருக்குறளைச் சென்னியிற் கொண்டு போற்றினார்கள்.

"தலைப்பட்டார் தீர்த்துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றைவரென்று – நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவருரைத்த
மெய்வைத்த சொல்"

எனப்போற்றினார் உமாபதிசிவம்.

''கலைமகள் வாழ்கைை முகத்ததெனினும், மலரவன்வண்டமிழோர்க் கொவ்வான்" என்னுந்திருவாக்கும் பிறர்திறத்தெங்ஙனமாயினும், நம்மாசிரியர்க்காயின் உண்மையன்றோ! உருத்திரசன்மர் உடனிருந்து கேட்டதும், இறையனாருங்கலைமகளாரும் புகழ்ந்ததுமாகிய பொய்யாமொழியின் மாண்பினையுடம்பெல்லா நாவாகக் கொண்டு ஊழிக்காலமெல்லாமுரைக்கினு முரைக்கலாகுமோ?

தேவர்குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழுமுனிமொழியுங் – கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவாசகமென்றுணர். (ஔவையார்)

(இக்கட்டுரை செந்தமிழில் தொகுதி 10, பகுதி 9 இல் வெளி வந்தது)

# கள்ளும் சோறும்

–பேரறிஞர் அ. மா. பரிமணம்

தேர்ந்த புலமையும் இனிய பண்புகளும் சான்ற அன்பர் திரு கதிரேசனார்வர்கள் செந்தமிழ் சூலைத்திங்கள் இதழில் சிறியகள் – பெரியகள் என்னும் பொருள் பற்றி ஒரு கட்டுரை வரைந்துள்ளார்கள். அச்சிந்தனைக் கட்டுரை பிறர் சிந்தனையைத் தூண்டுவதாகவும் உள்ளமை பாராட்டத் தக்கது. அப்பெயர்களையும் அவற்றின் பொருள்களையும் பிறிதொரு கோணத்தில் நின்று சிந்திக்குமுன் பொதுவாக எண்ணத் தக்கன சிலவுள.

சங்கப் பாடல்கள் யாத்தவராயினும், சமயப் பாக்கள் படைத்தவராயினும், அறநூல்களை இயற்றியவராயினும், ஒளவையார் என்பவர் தமிழ்ப்புலமை சான்ற, தமிழ் மக்களால் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்ற பெண்பாற் புலவர் என்பதனை அனைவரும் அறிவர். அப்பெருமை சான்றவர், சங்க கால மன்னனான அதியமான் அவைக் களத்தே அளித்த கள்ளினை உண்டதாகத்தம் பாடலிற் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவம் கடியும் கள்ளினை, ஈன்றாள். முகத்தேயும் இன்னாமையைத் தோற்றுவிக்கும் கள்ளினை, உண்டார் மதியை மயக்கும் கள்ளினை ஒளவையாரும் உண்டார் எனக்கோடல் அவர்தம் சால்பிற்கு ஏலாது எனக் கட்டுரையாளர் கருதினார் போலும்; அதனால் ஒளவையாரும் பிறரும் அதியமானொடு கள் உண்டாராகக் கூறும் புறப்பாட்டில் (புறம் – 235) இடம்பெறும் சிறியகள், பெரியகள் என்னும் பெயர்களில் அமாந்த சிறிய, பெரிய என்னும் சொற்களுக்குப் புதுப் பொருள் காணமுற்பட்டுச் சிறியகள் பதனீர் என்றும், பெரியகள் நாட்படுதேறல் (கடுகடுப்புமிக்கது) என்றும் கூறி, அவை முறையே ஒளவையார்க்கும் அரசற்கும் தக்கனவாகும் என விளக்கியுள்ளார். அவ்வகையில், வள்ளுவர் கடிந்த கள்ளுண்ணும் குற்றம், ஒளவையாரைச் சாராது எனக்காட்ட முற்பட்ட கட்டுரையாளர் முயற்சி பாராட்டுக்குரியதே. ஆனால் கட்டுரை முடிவு மேலும் சிந்திக்கத் தக்கதாக உள்ளது.

வள்ளுவர் வகுத்த அறங்களைத் தமிழகத்தில், இலக்கிய உலகம் தம் படைப்புகளில் ஏற்றுப்போற்றியது போலப் பொதுமக்கள் உலகம் தம் வாழ்க்கையில் ஏற்றுப் போற்றியதெனக் கூறல் இயலாது. அவர் கூறிய புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை போன்ற, எட்டும் தூரத்திலுள்ள குறிக்கோள்களையும் எட்டாக்குறிக்கோளாகவே, கொண்டு தமிழகம் வாழ்ந்து வருகிறது. மிகப்பலர் படிக்கவும், பலர் பேசவும், கவிதைபாடவும் சிலர் நூல்கள் எழுதவுமே திருக்குறள் பயன்பட்டு வருகின்றது என்றால் அது மிகையாகாது. ஒரு கோப்பையினைத் தம் குடியிருப்பாகக் கொண்ட கவிஞர்களை, செவி இனிக்க வல்லாரைப் பேசி, நாவினிக்கத் தேனீக்கள் திரட்டிய தேனை உண்ணலும் சமயக்குற்றமாகும் என்று வலியுறுத்தும் சமணம் போன்ற சமயங்கள் தமிழகத்தில் தழைத்திருந்த போதும், தமிழகத்தில் கள் உண்டல் முற்றிலும் கடியப்படவில்லையே! மகேந்திரப் பல்லவ மன்னன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம் எனும் வடமொழி நாடகத்தில் கள்ளுண்டு களித்தோன்இடம் பெறுகின்றானே! கலம்பகம் என்னும் புதிய தமிழ் இலக்கிய வகையும் கள்ளுண்டு களித்தவனைப் பற்றிக் கூறுவதைத் தன் உறுப்பினுள் ஒன்றாகக் கொண்டுளதே!

தமிழகத்தில் மூவேந்தராட்சிக்குப் பின்னர்க் களப்பிரர், பல்லவர், பிற்காலச் சோழ – பாண்டிய, இசுலாமியர், நாயக்கர், மாராட்டியர், கிறித்தவர் எனப் பல்வேறு இனத்தவர் ஆட்சிகள் நடைபெற்றபோதும் கள்ளுண்டலை முற்றிலும் கடிந்த ஆட்சி நடைபெற்றதாகக் கூறுதற்கில்லை. இருபதாம் நூற்றாண்டின் முன்பகுதியில், இந்தியப் பெருநாட்டின் அரசியல் விடுதலை வேண்டி நிகழ்ந்த விடுதலை வேள்வியில் – சுதந்திரப் போராட்டத்தில் – ஈடுபட்ட காந்தி அண்ணலின், அறவழிப்பட்ட சிந்தனையின் விளைவாகக் கள்ளுண்ணாமை – மது ஒழிப்பு – ஓரியக்கமாக அமைந்தது. அதன் பயனாக தமிழ் மாநிலத்தில் முதன்முதலாக நான்கு மாவட்டங்களில் சோதனையாக மது ஒழிப்பினைச் சட்டமாக்கிய நிலை உருவாகியது. அதனை அடுத்துத் தமிழ் மாநிலம் முழுவதும் மது ஒழிப்பு சட்டமாக்கப்பட்டது. அச்சட்டம் நடைமுறையிலிருந்தபோது, பொருளாதாரத்தில் கறுப்புப்பணம்

என்னுமொரு புதுப் பண்வகை தோன்றியதுபோலக் கள்ளமது (கள்ளச்சாராயம் காய்ச்சுதல்) என்னும் புதிய வகைக் கேடு நாட்டில் தோன்றியது. பின்னர் மதுவிலக்கிற்கு விலக்களிக்கும் நிலை உறுவாகி, ஊர்களின் புறத்தே இருந்து வந்த மதுக்கடைகளை ஊர்களின் உள்ளே இடம்பெறலாயின. கண்ணைக்கவரும் ஒளிவெள்ளத்தில், வண்ணக்குப்பிகளில் மேலைநாட்டு மதுவகைகள், பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைந்து காணப்படுகின்றன.

காந்தி அண்ணலின் பிரச்சாரத்தால் கள்ளுண்ணாமை என்னும் வள்ளுவ அறம் மேலும் வலிமை பெற்றுள்ளது எனக் கூறலாம். பலவகை மதுக்களையும் (கள்வகைகள்) நிலைவேறுபாடின்றிப் பருகிக்களிக்கும் மக்கள், நாட்டில் மிக்குள்ள போதிலும் மதுவுண்ணல் (கள் உண்ணல்) என்பது, தனி மனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் மிகவும் இழிந்ததாகவே இன்று கருதப்படுகிறது. தனிமனிதனையும், அவனது குடும்பத்தையும், அதனால் சமுதாயத்தையும் அழிக்கவல்ல மது(கள்) உண்டலின் கொடுமையையும், இழிவையும் உணர்ந்தவர்கள் அதே நோக்கில் சங்க இலக்கியங்களால் அறியப்படும் அக்கால மக்கள் கள்ளுண்டமையினை மதிப்பிட முற்படுவது நேரிதாகாது. இக்காலக்குடியர்களையும், அக்காலக் கள்ளுண்டவர்களையும் ஒரே அளவுகோலால் அளக்க முற்பட்டால், கள்ளுண்ட ஔவையார் போலும் சங்கச் சான்றோர் மேல், அப்பழி படராவண்ணம் காக்க அமைதி காணவேண்டி நேரும். அதனால் அத்தகையோர் உண்ட கள்ளைப் பதநீர் என்று குறிக்கும் இன்றியமையாண்மயும் ஏற்படும்.

தென்னை பனை போன்ற மரங்களின் பாளைகளை(அரும்புகள்) மடல் விரியாமுன்னர்க் கட்டி, நுனியைச் சீவிவிடுவதால் அங்கு வெளிப்படும் நீர்மப்பொருளே பொதுவாகக் கள் எனப்படும். ஒரு மரத்திலிருந்து அவ்வாறு பெறப்படும் கள், சில நோய்களைத் தவிர்க்கும் என்றும், அந்நிலையில் அது உடல் தேற்றியாகப் பயன்படக் கூடுமென்றும் நாட்டுமருத்துவர்கள் குறிப்பிடுவர். அதனின்று சில பொருள்களைச் சேர்த்து, நாட்கள் பல இருப்புவைப்பதால் அது

மதிமயக்கம் தன்மை கொண்டதாய், உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் தன்மை கொண்டதாய் மாறும் என்றும் கூறுவர். தென்னை, பனை போன்றவற்றிலிருந்து அல்லாமல், பிறவகையில் செயற்கையாகக் காய்ச்சி வடித்து எடுக்கப்படும் மதுவகைகளும் கள் என்னும் பெயரால் வழங்கப்பெறும். தோப்பிக் கள், நெல்லடு கள், நனையடு கள் என்பன அவ்வகையில் அமைந்தவனவாகும்.

மலர்களிலிருந்து தேனீக்களால் திரட்டப்பெற்றுத் தேனடைகளில் தேக்கி உருவாக்கப்பெறும் தேனும் கள் என்னும் சொல்லால் குறிக்கப் பெறுவதுண்டு. கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகி எனக் கம்பரும், பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல் எனக் குமரகுருபரரும் கூறுவன கொண்டு அறியலாம். குமரகுருபரர் கூறிய தேனும் ஈண்டுத்தேறல் என்கிறார். அம்பர் சுட்டிய கள்ளும், குருபரர் கூறிய தேனும், தேனிக்கள் திரட்டுமுன்னர் மலர்களில் துளித்து விளங்கும் நீர்மத்தையே குறிப்பதாயினும் அவையெல்லாம் கள்ளெனப் பொதுவாகக் கூறப்பட்டவையேயாகும்.

கள்ளின் பரியாயப் பெயர்களாக நிகண்டுகள் பலபெயர்களைத் தொகுத்துக்கூறுகின்றன. திவாகரம் இக்கு, நனை, தேன் முதலிய 49 பெயர்களையும் குறிப்பிட்டுள்ளன. இப்பட்டியல்களில் இடம்பெறாத, கள் பற்றிய பெயர்களும் உள. எடுத்துக்காட்டாகத் தெறிப்ப விளைந்த தீங் கந்தாரம் என்னும் பெயரைக் குறிப்பிடலாம். இனிய கந்தாரம் என்னும் பெயருடைய மது என்பது பழைய உரை. இதற்குத் தீங்கட்டாரம் என்றோதிக் கள்ளாக்கிய இனிய பண்டம் எனினும் அமையும் எனும் பழைய உரைக்குறிப்பும் உண்டு.

கள், நறவு, மட்டு, அரி, தேறல், பிழி, நொடை,, கந்தாரம், நனை, மகிழ் முதலிய பல சொற்கள் மது வகையினைக் குறிப்பனவாக இடம் பெற்றுள்ளன. இப்பெயர்களால் குறிக்கப்பட்ட பொருள் பலவகையாக அமைக்கப்பட்டிருக்கலாம். நாரால் அரித்து எடுக்கப் படுவது என்னும் பொருளில் நார் அரி தேறல் (புறம் – 367–7), நார் அரி நறவு (புறம் – 400 – 14), நார் அரி நனை (புறம் – 297–5,6), நார் அரி (கள் – புறம் 232–3) என்று தேறல், நனை, நறவு,

அரி, கள் முதலியன பயன்படுத்தப்பட்டுள்ளன. கோய் என்பது கள் முகக்கும் பாத்திரத்தையும், சாடி என்பது கள்ளினைத் தேறலைத் – தேக்கிவைக்கும் பெரும்பாத்திரத்தையும் (புறம் – 300–6;297–7) குறிக்க வந்துள்ளன.

அக்காலத்தே வாழ்க்கையின் பலநிலையிலுள்ளாரும் கள் பருகியுள்ளனர். அரசர்கள், வீரர்கள் ஆகியோரேயன்றிப் பொதுமக்களும் கள் பருகியுள்ளனர். கள் அரிக்கும் – பாண்சேரி (புறம் – 348–3,4) என்பது பாண்சேரி மக்கள் மது அமைத்துப் பருகியதை உணர்த்தும். இல்லடுகள் என்பது (புறம் – 329–1) வீடுகளில் கள் காய்ச்சப்பட்டதனைக் காட்டும். உண்மின்கள்ளே என்றும் பதிற்றுப்பத்தின் தொடர் (பதிற் – 18–1). சோறு சமைத்தல் போன்ற வேலைசெய்வோர் தம் பணியில் ஊக்கத்தொடு ஈடுபடற்பொருட்டுக் கள்ளை உண்ணுங்கள் என்று ஏவப்பட்டதனை உணர்த்துகின்றது. அரசர், வீரர் போன்றோர் போரில் ஈடுபடுங்கால் ஊக்கம் மிகுவித்தற் பொருட்டுக் கள் உண்ணுதல் உண்டு என்பதைனைக் கட்காமுறுவான் என்னும் அதன் உரையாலும் அறியலாம். வீரம் தூண்டப் படுதற்குத் துணையாக அமைதலின் ஈண்டுக் கள் வீரபானம் எனப்பட்டது. ஆடவர்பால் காம உணர்வைத் தூண்டிமிகுவிக்கும் வகையில் அருந்தப்பட்ட பானம் காமபானம் எனப்பதனை இலங்கிழை என்னும் மதுரைக் காஞ்சி அடிகட்கு விளங்குகின்ற பூணினையுடைய மகளிர் பொன்னாற்செய்த வட்டில்களிலேயெடுத்த மண நாறுகின்ற காமபானத்தைத் தர அதனை உண்டு எனக்கூறும் நச்சினார்க்கினியர் உரைகொண்டு அறியலாம்.

யவன நாட்டினர் தம் நாட்டிலிருந்து குப்பிகளில் கொண்டுவரப்பெற்ற தண்ணிய மணங்கமழும் தேறல் தமிழக அரசர்களின் அரண்மனைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (புற 56:18–20). புகார் நகர மக்கள் தம் செல்வ நிலைக்கு ஏற்பவும் காலச் சூழலுக்கு ஏற்பவும் உண்டும் பருகியும் உடுத்தும் மகிழ்ந்துள்ளனர். மட்டு நீக்கி மது மகிழ்ந்தும், பட்டு நீக்கித் துகில் உடுத்தும் என்னும் பட்டினப்பாலைப் பகுதிக்குக் கள்ளுண்டலைக் கைவிட்டுக் காம பானத்தை உண்டு மகிழ்ந்தும் பட்டுடுத்ததவற்றை நீக்கிப் புணர்ச்சிக்காலத்துக்கு நொய்யவாகிய

வெள்ளியவற்றை உடுத்தும் என்று நச்சினார்க்கினியர் உரைகூறி, அம்மக்கள் காலத்திற்கு ஏற்றவகையில் உண்டும் உடுத்தும் நிலவுப் பயன் கொண்டவற்றைப் புலப்படுத்தியுள்ளனர். இவற்றையெல்லாம் ஒருங்கே வைத்துக் காணுங்கால், கள்ளுண்டல், மது, மட்டு, தேறல், தெளிவு முதலிய எவ்வகையானதாயினும் சங்க காலத்தில் இழிவாகக் கருதப்பட்டது என்று எண்ணுதற்கிடமில்லை. இத்தகு சூழலில் உருவாகிய வள்ளுவம், கள்ளுண்டல் மிக மிகக் கடுமையான சமுதாய இழிவு என்று கடிந்து அறங்கூறும் இயல்பு எவ்வாறு உருவாகியது என்பது தனிச்சிந்தனைக்குரியது. அது நிற்க,

பொதுவாகக் கள்ளுண்ணலை இழிவாகச் சித்திரிக்காத சங்க இலக்கியப் பின்னணியினை மனத்துட்கொண்டு, சிறியகட்பெறினே என்னும் ஔவையாரின் புறப்பாடலில் இடம் பெறும் சிறிய கள் என்பவற்றை நோக்குதல் தக்கதாகும். தம்மைப் பெரிதும் மதித்துப் போற்றிய அரசன் அதியமான் நெடுமானஞ்சி இறந்தபோது கையறுநிலையாக ஔவையாரால் பாடப்பட்டது அப்பாடல். தம்மால் பெரிதும் மதிக்கப்பட்டவர் இறந்தபோது அப்பிரிவை ஆற்றாது, தம் அவல உணர்வை வெளிப்படுத்திப் புலவர்கள் பாடியுள்ள பாடல்களுள், உணர்ச்சியும் கற்பனையும் பூரிதமெய்தி விளங்குவது இதுபோற் பிறிதில்லை எனலாம். உலகமொழிகளிலுள்ள கையறுநிலைப் பாக்களிலிருந்து பத்துப் பாக்களைத் திரட்டுவதாயின் அவற்றுள் ஒன்றாய் இடம்பெறும் மாட்சியது இதுவாகும்.

இறந்த அதியனின் செயல்கள் சிலவற்றை நினைவுகூர்வதன் வாயிலாக அவனுடைய உயர் பண்புகளையும், அவன் இறப்பால் வறிதான புலவர் – கலைஞர் உலக நிலையினையும் இப்பாடல் கவனுறக் காட்டுகிறது. பாடலின் கருத்து வருமாறு: கள் சிறிது பெற்றால் எங்கட்கு ஈவான்; பெரிதாகப் பெற்றால் யாங்கள் பாட அவன் மகிழ்ந்து உண்பான். அவைகழிந்தன சோறு சிறிதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும் அதனைப் பகிர்ந்தளித்து அருகே இருக்கச்செய்து பலரோடும் உண்பான். அது கழிந்தது; புலால் சிறப்புடைய விருந்திடங்களிலெல்லாம் எங்களை இருத்தி உண்பிப்பான். அம்பும் வேலும் விளையாடும் அமர்க்களங்களில் எல்லாம் தான் முந்துற்று நிற்பான். அவை

கழிந்தன; மணங்கமழும் தம் கையால் முடை வீசும் என் (எம்) தலையினை அருளால் தடவுவான். அது கழிந்தது; எம் பற்றுக் கோடாகத் திகழ்ந்த அவனது மார்பினை ஊடுருவிய வேல், பாணர்தம் பாத்திரத்தினைத் துளைத்து, இரப்பவர் ஏந்தும் கையினைத் துளைத்து, புரப்பவர் பார்வையை பிடுங்கச் செய்து, புலவர்கள் தம் நாவிற் சென்று தைத்துக் கிடந்தது. எந்தந்தையாகிய அதியன் யாண்டுளனோ? இனிப்பாடுவாரும், அவர்க்கு ஈவாரும் இல்லையாயினர்.

நீர்த்துறையில் தேன் பொருந்தி யார்க்கும் பயன்படாது கழியும் மலர்கள்போலப் பிறர்க்கு ஒன்றையும் கொடாது மாய்ந்தழியும் உயர்கள் பல.

இப்பாடலின் தொடக்கப்பகுதியில் ஔவையார் அதியனின் பண்புணர்த்துவனவாக அமைந்த இருசெயல்களை நினைவுகூர்ந்து இரங்குகின்றார். ஒன்று தமக்கும் தம்மைச்சார்ந்தவர்க்கும் கள் ஈந்ததாகும், பிறிதொன்று தங்களொடு சோறுண்டதாகும். முன்னது அதியன் திருவோலக்கத்தில் மகிழ்ந்திருக்கையிலும், பின்னது அரண்மனை விருந்தகத்திலிருக்கையிலும் நடைபெற்றனவா கலாம். சோறு, எந்நிலையானவராயினும் மக்களாயினும் அனைவருக்கும் உரியதென்பதும், இன்றியமையாதது என்பதும் நினைவிற்கொள்ளத்தக்கது. இவ்வுண்மை, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்னும் குறள் (322) கொல்லாமை அதிகாரத்தில் கோக்கப் பெற்றிருப்பது கொண்டும், ஓம்புதல் சோர்ந்தும் கொலை வராமற் குறிக்கொண்டு காத்தல், அதற்குப் பகுத்துண்டல் இன்றியமையா உறுப்பு எனும் பரிமேலழகர் விளக்கம் கொண்டும் அறியலாம். கள் (மது) இன்ப ஊக்கியாக அமைவதால் மனமகிழ்வுக்காகக் கொள்ளத்தக்கதாகும். இவற்றை உளங்கொண்டு புறநாநூற்றின் பழைய உரையாசிரியர், சிறிய அளவினையுடைய மதுவைப் பெறின் என்றும் பெரிய அளவினையுடைய மதுனைப் பெற்றாயின் என்றும் பொருள் கூறினார். நாட்டிலும் வீடுகளிலும் எளிதாகக் கிடைக்கக்கூடிய கள் (மது) ஆயின், அரசனால் எப்போதும் எந்த அளவிலும் எளிதாக அதனைப் பெற்றுவிடக்கூடும். அங்ஙனமன்றி, ஈண்டுக்குறிப்பிடப்படும் கள் (மது), பிறநாட்டிலிருந்து நோக்கில்

வருவதாய், அரிதிற் பெறத்தக்கதாய் இருப்பின் அதனை அரசனாயினும், எப்போதும் எந்த அளவிலும் பெறமுடியாது போகவும் கூடும். இக்கருத்தினைப் பெறின் என்னும் சொல்லாட்சி கொண்டறியலாம். இவ்வாறு சிந்திக்க நாளென ஒன்றுபோல் என்னும் குறளின் (334) விளக்கவுரையில் இடைவிடாது ஈர்தலான் வாளின் வாயதென்றும், அஃதீர்கின்றமையை உணர்வார் அரியாகலின் உணர்வார்ப் பெறின் என்றும் கூறினர் என்று விளக்கியிருப்பது இடமளிக்கின்றது.

அதனால் அரிதாகப் பெற்ற கள் சிறிய அளவினதாக இருப்பின் அதனைத் தான் மட்டுமே உண்டுவிட விரும்பாமல் புலவர், கலைஞர் ஆங்கிய எங்கட்கு நல்குவான்; கள் மிக்க அளவில் பெற்றால் யாங்கள் உண்டு மகிழந்து பாட, அவனும் உண்டு மகிழ்வான் என்று, அதியமானின் அருட்பண்பும், ஈகை இயல்பும் புலப்படப் பற்றியது. அனைவர்க்கும் இன்றியமையாத சோற்றினைப் பெறின் என்று கூறவில்லை. அது அவன் நாட்டிலும் அரண்மனையிலும் எப்போதும் மிக்க அளவில் இருக்கக்கூடியது. சிறிய அளவுடைய சோறு என்று (சிற்றளவு) உரையாசிரியர் கூறிகின்றார். சோறு, எங்கும் என்றும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உண்பவா எதிர்பார்த்துக் குறிப்பிட்ட அளவே சமைக்கப்படுவதாகும். பத்துப்பேர்களுக்கென உணவு அமைக்கப்பட்ட போது எதிர்பாராது பதினைந்து பேர் வந்துவிட்டால் அவர்களைப் புறக்கணிக்காது, பதினைந்து பேர்களுக்கும் பகிர்ந்து அளித்து உடனிருந்து உண்பது உயர் பண்பாகும். உணவு பெரிய அளவில் இருந்தால் வரையாது மிகப்பலரோடு பகிர்ந்து உடன் உண்ணல் கூடும். இவ்வாறு அளிப்பதனை அதியன் தன் பண்பாகக் கொண்டிருந்தான் என்பதனைப் புலப்படுத்தவே, அவன் சோறளித்த பாங்கினை நினைந்து ஔவையார் இரங்குகின்றார்.

கள், களிப்பூட்டும் பொருளாதலின், சிறிய அளவில் உள்ளபோது, தன்னலங்கருதாது, ஔவையார் போன்ற பிறர் நலமே கருதிச் செயற்பட்டதும், சோறு யாவர்க்கும் இன்றியமையாததாதலின், அது எந்த அளவில் இருந்தாலும், பலருக்கும் பகிர்ந்தளித்து உடன் உண்ணும் வகையில் அழகியல்

செயற்பட்டதும் அதியனின் உயர்பண்பினை உலகறியக் காட்டுவனவாக உள்ளன. இதனால், ஔவையாரை மதுவருந்திய பழியிலிருந்து தப்புவிக்க சிறிய பெறிய என்பதற்கு வேறுவகையில் பொருள் காணவேண்டியதில்லை.

பொதுவாகத் தமிழில் சிறிய பெரிய என்னும் பெயரெச்சங்கள், பொருள் அல்லது செயலின் அளவினை உணர்த்தவே பயன்படுத்தப்படுகின்றன. நீட்டல், முகத்தல், நிறுத்தல் முதலிய அளவை வகையில் இச்சொற்கள் குறைவு, கூடுதல் எனும் கருத்தினை உணர்த்துவனவாகவே பயன்படுத்தப் படுகின்றன. இவ்வெச்சங்கள் அஃறிணை வினையாலணையும் பெயர்களாகப் பயன்படுத்தப்படுங்காலும் இவ்வகையிலேயே பொருள்படும். சிறுமை என்னும் பண்புச்சொல் அடிப்படையில் சிறியன சிந்தியாதான் என்னும் போதும் குறைவு, இழிவு என்னும் கருத்தால் இவ்வாறே பொருள் படக்காணலாம். இம்மரபின் வேறாகச் சிறிய கள் என்பதற்குக் கடுகடுப்பு உண்டாக்காத பதனீர் (இளங்கள்0 என்றும், பெரிய கள் என்பதற்கு கடுகடுப்பினை மிகவும் கொண்ட நாட்படுதேறல் (கடுங்கள்) என்றும் கொள்ளுதல் வேண்டாததொன்றாகும்.

அரசன் தன் நிலைக்கு ஏற்ப நாட்படுதேறலையும், புலவர் நிலைக்கு ஏற்பப் பதநீரையும் அளித்தான் என்பதே கருத்தாயின், ஔவையார் ஈரிடத்தும் கள் என்னும் ஒரு சொல்லையே பயன்படுத்தாது, அக்கருத்து நன்கு புலப்படுமாறு வேறு சொற்களால் உணர்த்தியிருக்கலாம். கள் (மது) உண்டல் அன்று இழிவாகக் கருதப்படாததாலும், வாழ்க்கையின் பல நிலைகளிலும் ஈடுபட்டுள்ளவர்கள் கள் (மது) அருந்தியதனைக் காணமுடிவதாலும், சிறிய கள் பெரிய கள் என்பனவற்றிற்கு அளவு அடிப்படையில் பழைய உரையாசிரியர் பொருள்கண்டு உரைவரைந்திருப்பது பொருத்தமுடையதாகவே தோன்றுகிறது. நட்டானா இழந்தமையால் தோன்றிய அவல உணர்வுகளைப் புலப்படுத்தும் கொள்கலமாய்த் திகழும் இப்பாடலின், எஞ்சிய பகுதிகளில் ததும்பி நிற்கும் உணர்ச்சிகளையும், கற்பனைகளையும், இலக்கண எழிலையும் உணர்ந்து, துய்ப்பது, இலக்கியத் தும்பிகளின் இனிய பணியாகும்.

# அழகியல்நோக்கில்புறநானூற்றுப் பாடல்கள்

– பேரறிஞர். தெ. திருஞானமூர்த்தி

*(முன்னிதழ்த் தொடர்ச்சி)*

*"தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்*
*பல்லிருங் கூந்தல் மகளிர்*
*ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே (73)*

எனச் சூளுரைக்கின்றான். எனவே, பரத்தமை விலக்கப்படவேண்டியது என்பது இதில் உணர்த்தப் பெறுகிறது.

மன்னன் என்பவன் பண்டைச் சமூகத்தில் ஒரு சிறந்த தனிமனித மதிப்பை முன்னிறுத்த வல்லவன் என்பது விளங்கும். காலந்தோறும் எழும் இத்தேவையைக் காலம் கடந்தும் இப்பாடல்கள் பறைசாற்றி நிற்கின்றன.

புலவர்களின் வாழ்க்கையிலும் நேர்மையும் நெறியும் இருந்தமையை அவர்தம் பாடல்கள் விளக்கி நிற்கின்றன. "வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன், மெய்கூறுவல்" (139) என்கிறார் மருதன் இளநாகனார். 'வாணிகப் பரிசிலன் அல்லேன்' என்ற இலக்கைப் பெருஞ்சித்திரனாரிடம் காணமுடிகின்றது.

*"வருகென வேண்டும் வரிசை யோர்க்கே*
*பெரிதே யுலகம் பேணுநர் பலரே" (207)*

என வறுமையில் சோரம்போகா அவர்தம் நெஞ்சுரமும் சிறந்த தனிமனித முன்மாதிரி எனலாம்.

புகழ் எனின் உயிரும் தருகுவர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளமாட்டார்கள் (182) என்பதே சான்றோர் முன்மாதிரியாகச் சங்கப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

மன்னன், புலவர், சான்றோர் முதலியோரின் உயர்நெறிகளைப் புறக்கவிதைகள் பேசுவதனால் அவை சமூக உருவாக்கத்திற்கான முன்மாதிரிகளாக விளங்குகின்றன.

இச்சிறப்பு பல புறப்பாடல்களின் காலம் கடந்தும் செல்வாக்குச் செலுத்தும் வல்லாண்மைக்கு அடிப்படையாய் அமைந்துள்ளது.

புறக்கவிஞர்கள் சொல், கருத்து என்ற இருநிலைகளில் முரண் அமைத்துக் கவிதையில் பொருட்களத்தைச் சிறக்கச் செய்துள்ளனர். இவை கவிதைக்குள் சந்த இனிமையை ஏற்படுத்துவதுடன் நினைவுத்தளத்துக்குள் கவிதையை வைத்துக் கொள்வதற்கும் பெரிதும் உதவியிருக்கின்றன. முரணால் சந்தமும் சந்தத்தால் முரணும் படைக்கப்பெற்ற போதும் அவை கருத்து என்ற உயிர்நாடியை இழக்கவில்லை.

புதிய கவிதைகளில் சந்த இழப்பு ஒரு வகையான பொருள் இழப்பிற்கு இட்டுச் சென்றிருக்கிறது. மேலும், கவிதை செவி மற்றும் கண்ணோடு மட்டும் தொடர்புடையதன்று. அது பேசும் இடமும் விசாரணைக்கு உட்படும் இடமும் மனம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதனை உணராமல் சந்தத்தைத் தொலைத்த பல புதுக்கவிதைகள் தம் வாழ்வையும் தொலைத்தன. மீண்டும் மீண்டும் ஒரு கவிதை பேசப்பெறுவதற்கு அது ஏதேனும் ஓர் இசைக் கட்டுக்குள் தன்னை உட்படுத்திக் கொண்டாக வேண்டும். அப்போதுதான் நினைவுத் தளத்தில் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கவல்ல ஆற்றலுடையதாகத் திகழும். இல்லையேல் அது மறதி என்னும் மரணப் புதைமணலுள் மாய்ந்து போகும். இத்தெளிவு புறக் கவிஞர்களிடம் ஆழமாக இருந்ததை அறியமுடிகின்றது.

ஞாயிறு அனையை நின் பகைவர்க்கு, திங்கள் அனையை எம்மனோர்க்கே (59) என்பதில் ஞாயிறு*திங்கள் என்ற சொல் முரண் அமைந்து கவிதைப் பொருள் சிறந்துள்ளது. எதிர்த்தோர் வாழக் காண்டலும் இல்லை; நின்னைப் பொருந்தியோர் வருந்தக் காண்டலும் இல்லை (61) என்பதில் எதிர்த்தல்*பொருந்தல்; வாழல்*வருந்தல் என இரு எதிர்வுகள் அமைந்து கவிதை சிறந்துள்ளது. வாழக் கண்டன்றும் இலமே; வருந்தக் காண்டல் அதனினும் இலமே என அடுத்து வரும் சொற்கள் சந்த இனிமையையும் தந்து நிற்கின்றன. 'அடுதீ யல்லது சுடுதீ யறியா' (70) என ஓசை நயத்தோடும் இயைபோடும்

அமைந்து அறியா என்ற எதிர்மறை முடிப்புச் சொல்லால் ஓர் உயர்ந்த கருத்தை இத்தொடர் வழங்கி நிற்கின்றது.

*"மகளிர் மலைத்த லல்லது மள்ளர்*
*மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப" (10)*

என்பதில் மலைத்தல் என்ற ஒரே சொல் முன்னொட்டுச் சொல்லால் கருத்து முரணை வழங்கிக் கவிதைப் பொருளை உயர்த்தி உள்ளது. இதே போல் கேள்விக் கினியை கட்கின்னாயே; கண்ணுக்கினியர் செவிக்கின்னாரே(167) என்பதில் புலவர் சொற்களை இடம் மாற்றி முரண் அமைத்துக் கருத்தைச் சிறக்கச்செய்து கவிதைக்கு அழகூட்டியுள்ளார்.

எதிர்மறைச் சொற்கள், எதிர்மறைப் பொருள், ஒரே சொல்லின் பொருளை இருநிலையில் அமைத்தல், சொற்களை இடம் மாற்றிப் பொருளை வேறுபடுத்தல் என முரண்நிலையில் பல்வேறு உத்திகளைக் கையாண்டுப் புறக்கவிஞர்கள் தம் கவிதையின் அழகியலை மேம்படுத்தியுள்ளனர்.

இலக்கியக் கலைகளுள் கவிதை செறிவானதும் நுட்பமானதுமாகும். எனவே கவிஞன் தேர்ந்து தெளிந்து கையாளும் சொற்களே மனித மனத்தில் நுட்பமான உணர்வுகளை எழச் செய்யும். கவிதைக் கலையின் வாழ்வே மனித உணர்வை ஆட்டிப்படைக்கும் அதன் உணர்ச்சியில்தான் அடங்கிக் கிடக்கின்றது. உணர்ச்சி என்ற தடத்தின் வழியே உலகை அறிமுகம் செய்யும் வழிகாட்டியே கவிதை ஆகும். புறக்கவிஞர்கள் மன உணர்வுகளை அலை அலையாய் எழுப்ப அவர்கள் கையாண்ட சொற் பயன்பாடும் சிறப்புடையதாகும்.

சொற்களைக் குறியீட்டு நிலையில் பயன்படுத்தி சங்கத் தமிழரின் தொன்ம மனநிலையை நெருங்கியுள்ளனர். இக்குறியீட்டுச் சொற்களைப் பிற புலவர்களும் அவ்வாறே கையாண்டனர். நல்வாழ்த்துக்கு மழைத்துளியைப் பயன்படுத்தல் புறக்கவிஞர் நெறியாகும். 'மாமழை பொழிந்த நுண்பஃறுளியினும் வாழிய பலவே' (34) என்றும் பேசுகின்றனர். ஆனால் இகழ்ச்சியையும் நிலையாமையையும் உணர்த்த மணல் என்ற சொல்லையே மிகுதியும் பயன்படுத்தியுள்ளனர். 'எக்க

ரிட்ட மணலினும் பலவே' (43) எனவும் பெருங்கட னீரினு மக்கடன் மணலினும் பலவே' (9) எனவும், "கடுவளி தொகுப்ப வீண்டிய வடுவா ழெக்கர் மணலினும் பலவே" (55) எனவும் வருமிடங்களில் மணல் என்ற சொல் நிலையாமைப் பொருளையே குறிப்பாய் உணர்த்தி நிற்கிறது. பிற இடங்களிலும் மழைத்துளியும் மணலும் இவ்வாறே ஆளப்பெற்றுள்ளன. விதிவிலக்காகப் புறம் 198 ஆம் பாடலில் இகழ்ச்சிக் குறிப்பில் மழைத்துளியும் இடம் பெறுகின்றது.

சொற்கள் உயர்ந்த பண்பாட்டைத் தாங்கி வருகையில் அவை நம் நெஞ்சில் ஆழப்பதிகின்றன. பிசிராந்தையார் வாரார் என்ற சான்றோர்க்கு,

*"செல்வக் காலை நிற்பினும்*
*அல்லற் காலை நில்லலன் மன்னே" (215)*

என்கிறான் கோப்பெருஞ்சோழன். அவரைப்பற்றி அவன் கூறுகையில்,

*"இகழ்வில னினிய னியாத்த நண்பினன்*
*புகழ்கெட வருஉம் பொய்வேண் டலனே*
*தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்*
*பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த*
*காதற் கிழமையு முடைய னதன்றலை*
*இன்னதோர் காலை நில்லலன்" (216)*

என அடுக்கிச் செல்கின்றார். இவ்வடுக்கு இருபதாம் நூற்றாண்டுப் பெருங்கவிஞர் பாரதிதாசன் வரை செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை அறியமுடிகின்றது.

*"மிக்குயர்ந்த சாதிகீழ்ச் சாதி என்னும்*
*வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க் கில்லை*
*பொய்க்கற்றே சாதிஎவல், ஆரியச் சொல்*
*புறநஞ்சு பொன்விலங்கு பகையின் ஈட்டி"*

(பாரதிதாசன் கவிதைகள்–3, ப.61)

என மற்றொரு தளத்தில் விவரிக்கின்றார் புரட்சிக்கவிஞர்.

புலவர்கள் பாடும் நெறியிலும் ஓர் உயர்ந்த பண்பாட்டைப் பின்பற்றியுள்ளனர். சோழனும் பாண்டியனும் ஒருங்கிருந்த காட்சியைப் பாடிய காரிக்கண்ணனார் பாடல் (58) இதற்குத் தகுந்த சான்றாகும். விருந்தாக வந்திருப்பவன் பாண்டியன் ஆதலானும் பாடியவர் சோழநாட்டுப் புலவர் ஆதலானும் தன் மன்னனினும் பாண்டியனைச் சிறப்பித்துப் பேசுகின்றார். முதல் பதின்மூன்று அடிகளில் சோழன் மற்றும் பாண்டியன் சிறப்பைக் கூறுகின்றார். இதில் "நீயே, தன்புனற் காவிரி கிழவனை என்றும் நீயே அறந்துஞ் சுறந்தைப் பொருநனை என்றும் இரண்டே அடிகளில் மட்டும் சோழனைப் பேசிய புலவர் எஞ்சிய பதினோரு அடிகளில் பாண்டியனைச் சிறப்பித்துள்ளார்.

இருவரும் ஒருங்கிருக்கும் காட்சியைக் கூறவந்த புலவர் சோழனைப் பலராமனுக்கும் பாண்டியனைத் திருமாலுக்கும் உவமை செய்கின்றார். இதனை அவர் கூறும் முறைவைப்பே விளக்கி நிற்கிறது. உடனிலை திரியீர் ஆயின் இப்பயங்கெழு மாநிலம் கையகப்படுவது பொய்யாகாதே என ஒற்றுமை அறம் பேசுகின்றார். உங்கள் நட்பிற்குக் கேடு செய்வோர் எவ்வாறெல்லாம் முயல்வர் என்பதை முற்கூறிய மூன்று நிலைகளில் விளக்குன்றார்.

*"அதனால் நல்ல போலவு நயவ போலவும்*
*தொல்லோர் சென்ற நெறிய போலவும்*
*காத னெஞ்சினும் மிடைபுகற் கலமரும்*
*ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளா*
*தின்றே போல்கநும் புணர்ச்சி ..." (58)*

என்கிறார். தாம் கூறவரும் கருத்தை உயர்ந்த பண்பாட்டோடும், தெளிவான விவரிப்போடும், உறுதிபடவும், முழுமையாகவும் கூறும் திறம் புறக்கவிஞர்களிடம் இருந்தமையை மேற்காட்டிய பாடல் விளக்கி நிற்கின்றது.

சொல்லின் சிறுகூறுகளைக் கூட ஆற்றலோடு புறப்புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். நம்பிசெழியன் சிறப்பைப் பேசவந்த பேரெயின் முறுவலார் அன்விகுதியை இவ்வாறு பயன்படுத்தியுள்ளார். இவர் பாடலில் (239) அன் விகுதி இருபது

இடங்களில் இடம் பெறுகின்றது. திணை, பால், காலம் காட்டல் என்ற நிலையைக் கடந்தே இவ்விகுதி இக்கவிதையில் ஆளப் பெற்றுள்ளது. இல்லையேல் ஓரிரு அன் விகுதியே போதுமானதாகும். கவிதையில் கதை சொல்வதற்கு இவ்வன் விகுதி பெரிதும் உதவியுள்ளது. தோள் மணந்தனன், பூச்சூடினன், சாந்து நீவினன், பகைவரை அழித்தனன், நட்டோரை உயர்த்திப் பேசினன், வலியரென வழிமொழியலன், மெலியரென மீக்கூறலன் என இவ்அன் விகுதி அடுத்தடுத்து ஒவ்வொரு தொடரிலும் இடம் பெறுவதால் கவிதைக்கு ஓர் எளிமையும் இசைமையும் கிடைத்திருக்கின்றன. ஒருவர் செழியனின் சிறப்பைச் சொல்ல பிறிதொருவர் பிறகு என்று கேட்பது போலவும் கவிதை அமைந்திருப்பதால் அது நம் மனத்தோடு நெருங்கிப் பேசுகிறது.

கவிதையில் கதை சொல்லல், எளிமை, இனிமை, வாசகனின் மனத்தோடு பேசுதல் ஆகிய நிலைகளில் இவ்அன் விகுதி பயன்படுத்தப்பெற்றிருக்கிறது. இதே போல மன்னே, மின், ஏகாரம் முதலிய சொற் கூறுகள் ஆழமான பொருளில் கையாளப் பெற்றுள்ளமையை புறப்பாடல்கள் கொண்டு தெளியலாம்.

திட்ப நுட்பம் வாய்ந்த கவிதை வடிவத்தில் மொழியின் சிறு அலகு கூட சிறப்பான முறையில் ஆளப்பெற்றிருக்கின்றது என்பதனையே இவை விளக்கி நிற்கின்றன.

## முடிவுகள்:

கவிதைக் கட்டமைப்பு, வாழ்க்கை நெறி, கருத்தை விளக்கும் முறை இம்மூன்றிலும் மூன்றாய்ப் பகுத்துச் சொல்லும் நெறி புறக்கவிதைகளில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

விளி அடுக்காகவும் அதன் பின்னரும் அமையும் ஒரே சொல் கவிதையின் பெருமை மனத்தில் ஆழ எதிரொலிக்கப் புலவர் கையாண்ட நெறியாகும்.

உவமையே பாடலில் இதயமாக அமைந்து கூறவரும் கருத்தை எளஇதில் விளக்கும் நிலையில் பல புறப்பாடல்களில்

உவமை கையாளப்பெற்றுள்ளது. வேறு சில பாடல்களில் கவிதையைச் சிறக்கச் செய்யும் ஒரு கூறாகவும் உவமை இடம் பெற்றுள்ளது.

கீர்த்திப்படுத்துவதன் மூலமும் நினைவுகூர்வதன் மூலமும் நெஞ்சை அள்ளும் அவலங்களைப் புறக்கவிஞர்கள் படைத்துக் காட்டியுள்ளனர்.

உயர் அறங்களே கவிதையின் அழகியலாகவும், பொருளாகவும் அமைந்து பல புறப்பாடல்கள் விளங்குகின்றன.

உயர்ந்த வாழ்க்கை நெறியும் தனிமனித நெறியும் கவிதையின் அழகுக்கு அழகு சேர்த்திருப்பதோடு, அவை சிறந்த சமூக முன்மாதிரிகளாகவும் திகழ்கின்றன.

சொல், கருத்து என்ற இருநிலையில் முரண் அமைத்துக் கவிஞர்கள் தம் கவிதைப் பொருளைச் சிறக்கச் செய்துள்ளனர்.

புறப்புலவர்கள் மொழியின் சிறு அலகையும் திறம்படக் கையாண்டுத் தம் கவிதையில் செறிவுக்குச் செறிவூட்டியுள்ளனர்.

**விடுமுறை நாட்கள்**

| | | |
|---|---|---|
| ஒரு சப்பானியன் | 261 நாட்கள் வேலை செய்கிறான்; | |
| | 104 நாட்கள் விடுமுறை | |
| ஓர் ஐரோப்பியன் | 225 நாட்கள் வேலை செய்கிறான்; | |
| | 140 நாட்கள் விடுமுறை | |
| ஓர் இந்தியன் | 201 நாட்கள் வேலை செய்கிறான்; | |
| | 164 நாட்கள் விடுமுறை | |

# முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழில் சமயம்

– பேரறிஞர் பெ. சுயம்பு

## முன்னுரை

**முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்** திருமுருகனின் அருட்கவி குமரகுருபர சுவாமிகளால் பாடப்பெற்றது. தமிழில் கிடைக்கப்பெற்றுள்ள கவிநயம் மிகுந்த பிள்ளைத் தமிழ்களுள் சிறந்தவொன்று. இப்புலமை ஓவியம் உயிரூட்டமுள்ளதாக இலங்குதற்கு இதனுள் சமயக் கருத்துக்கள் பல உணர்வாக இழையோடுகின்றன. குமரகுருபரர் தம் சமயக் கருத்துக்களை எளிய நடையில் பழகு தமிழில் குறிப்பிடுகின்றார்.

## கௌமார சமயம்

சமயம் மனித வாழ்வினின்றும் பிரிக்க வியலாத ஒன்று. எல்லோரும் அமைதியாக இன்புற்று வாழ்வதற்கு அடித்தளமாக உள்ள கூட்டு வாழ்க்கையின் உயிர் நாடியாக மிளிர்கிறது. ஒவ்வொரு தனிமனிதனையும் சமுதாய உணர்வு உள்ளவனாக – இயற்கையின் பிரிக்க வியலாத உறுப்பாகப் புலப்படுத்துகிற தொண்டு வாழ்க்கையைச் சமயங்கள் யாவும் உயிர் நாடியாகப் பெற்றுள்ளன. இத்தகு சமயத்தின் கூறுகளாக மெய்ம்மையியல் (தத்துவம்), புனிதநூல், வழிபாட்டு முறைகள், இயற்கையிறந்த நம்பிக்கை, குலக்குறியீடு ஆகியன அமைகின்றன. இச்சமயக் கூறுகளைக் குமரகுருபரர் முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழில் ஆங்காங்கு ஊடுருவச் செய்துள்ளார்.

குருபரசுவாமிகள் இப்பிள்ளைத்தமிழில் சம்புப்பக்கக் கௌமாரத்தின் கூறுகள் பலவற்றைப் படரவிட்டிருக்கிறார். ஈசானம், தத்புரசம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் எனும் ஐந்து முகங்களை உடைய சிவபிரான், அதோமுகம் என்ற ஆறாவதையும் ஏற்று ஆறுமுகக் குமரனாகி அருளுகிறான்

என்பது சம்புப் பக்கக் கௌமாரத்தின் கொள்கை. சிவனே முருகனாக அடையவியலும் என்று கூறுவது சம்புக் கௌமாரத்தின் மரபு. ஆனால் பக்குவப்பட்ட உயிரே குமரனாகப் படிமலர்ச்சி பெற்று உயர்கிறது என்று அனுப்பக்கக் கௌமாரத்தினர் கருதுகின்றனர். இப்பிரிவினர் அறிவு (ஞான) நெறியை வலியுறுத்துகின்றனர்.

சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம் ஆகிய சமயங்களை உலகியலில் காணப்பெறுகிற மனித உறவுகளின் அடிப்படையில் ஒருங்கிணைக்கிற முயற்சியும் சம்புபக்கத்தில் இடம் பெற்றுள்ளது. குமரனைச் சிவன் – பார்வதியின் புதல்வன், கணபதியின் இளவல், திருமாலின் மருகன் என்று குடும்ப உறவு அடிப்படையில் விவரிக்கிற புராணச் செய்திகள் பலவற்றை இப்பிள்ளைத் தமிழில் பரக்கக் காணலாம்.

## மெய்ம்மையியல்

முருகப் பெருமானே முழுமுதற் கடவுள். அவன் வினையின் நீங்கி, விளங்கிய அறிஞன். அனைத்து உலகங்களுக்கும் விதையாக (மூலமாக) உள்ளவன். கால எல்லையைக் கடந்தவன். முழுவதுமாக அறியவியலாத பேரறிவு அவன்.

*ஆதிப் பிரானென்று மும்முதற் கடவுளும்*
*அடித் தொழும் பாற்றே (செங்கீரை–5) ——அடி*
*முடியு மின்றிவெறு வெளிக டந்துமறை*
*முடிவி னின்றுநிறை செல்வனை (காப்பு – 4*
*மூல மெனக்குல நான்மறை யோலிடு*
*முழுமுதலே (தாலம் – 6)*
*அறிவு ளறிவை யறிவு மவரு மறிய வரிய பிரமமே*
*(வருகை – 9)*

குமரன் எல்லாப் பொருளிலும் ஆதாரமாக ஊடுருவி நிறைந்து (அந்தயாமி) விளங்குகிறான் அவனே அனைத்துத் தத்துவங்களுக்கும் காரணன்.

*ஊனாயு யிர்க்குயி ரானாய் தாலோ தாலேலோ.....*
*நானாயெ னக்கரி தானாய் தாலோ தாலேலோ*
*நாதாதி கட்கனு பூதா தாலோ தாலேலோ (தாலம் – 10)*

நானாய் எனக்கு அரிதானாய் என்று இறைவனது அத்துவித நிலையைக் குமரகுபர சுவாமிகள் சுட்டுகின்றனர்.

திருமால், பிரமன் போன்ற தேவர்கள் யாவரும் மீண்டும் பிறத்தலாகிய வினைச் சக்கரத்துட் சிக்கிச் சூழல்பவர்களே. இத்தேவர்களுக்கும் மனிதர் முதலாய பிற உயிரினங்களுக்கும் தத்தமது வினைப்பயனுக்கு ஏற்பத் தனு, கரண, புவன, போகங்களைக் குமரக் கடவுளே அருள்கிறான். இத்தகைய பரம்பொருள் நிலையைப் பின்வரும் அடிகளில் காணலாம்.

*செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள (செங்கீரை –1)*

*ஒருவனீ மும்முதற் கடவுளு மிளைப்பாற*
*உலகெலாந் தலையளித்து (சிறுபறை – 1)*

தம்மை வழிபடுவோர்க்கு இம்மையில் இன்ப வாழ்வு நல்குகிற வரங்களையும் மறுமையில் வீடுபேற்றையும் குமாரசுவாமி அருளவல்லவன். அவனே கண் கண்ட தெய்வமாவான்.

*வேண்டிய வரங்கொடுப்பான்*
*மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லார்புவியில்*
*வேறில்லை*
*அழியாத வீடும் தரக்கடவன் இவன் (அம்புலி – 6)*

## புராணச்செய்திகள்

சமயங்கள் தம் தெய்வத்தை முழுமுதற் கடவுள் என்று நிலைநாட்டல், அத்தெய்வத்திடம் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுதல், தெய்வத்தின் அளப்பரிய ஆற்றலை முன்னிறுத்தி அறநெறிகளை வலியுறுத்துதல், சமுதாய அமைப்பு முறைகளை விவரித்தல் போன்ற நோக்கங்களுக்காகப் புராணக் கதைகளைக் கற்பிக்கின்றன. இக்கதைகள் இயற்கை இறந்த ஆற்றலையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு தெய்வம் தன்னை வழிபடும் அன்பர்களுக்கு உலக வாழ்வில் பல்வேறு இன்பங்களையும்

மறுவுலகில் சொர்க்கம் அல்லது வீடுபேற்றையும் அருளும் என்ற திடமான நம்பிக்கையை அளிக்கும் வகையில் அமைகின்றன.

குமரக் கடவுளின் பேறாற்றலை மட்டுமன்றி, சிவபெருமானின் பேராற்றலையும் உணர்த்துமாறு அமைந்த பல புராணச் செய்திகள் இப்பிள்ளைத் தமிழில் காணப்படுகின்றன. இச்செய்திகள் சிவனே குமாரனாக அருள்கிறான் என்ற சம்புக் கௌமாரத்தின் வெளிப்பாடாகும்.

சூரபன்மனை ஆட்கொண்டது, கிரவுஞ்ச மலையைக் கிழித்து, பிரமன் தலையில் குட்டித் தண்டித்தது, வள்ளியைக் காதலித்தது போன்ற பல கதைகள் இவ்விலத்தியத்தில் பரவலாக இடம்பெற்றுள்ளன.

*குன்றத் திறந்திட்ட குடுமிவேல் சூருயிர்*
*குடித்திட விடுத்து நின்றான் (அம்புலி – 8)*
*சிறைவி டுத்தமரர் குறைமு டித்துதவு*
*சேனாப திப்பெருமாள் (காப்பு – 3)*
*குண்டிகைக் கள்வனைக் குடுமித் தலைப்பசுங்*
*குருதிபொங் கப்புடைத்தான் (அம்புலி – 8)*
*கானக் குறப்பெண் குடியிருந்த*
*கன்னிப் புனத்துத் தினைமாவும்*
*கமழ்தேன் றெளிவு முண்டுசுவை*
*கண்டாய் (சிற்றில் – 6)*

முருகன் சிவக்குடும்பத்தின் அருமைப் புதல்வன். திருமாலின் மருகன். தெய்வயானையைப் பெரியோர் வழியாகவும் குறத்தி வள்ளியைத் தமிழ்க் களவுக்காதல் வழியாகவும் மணந்து, இறைவன் வாழிடம், இனம் போன்ற வேறுபாட்டு வரைவுகளைக் கடந்தவன் என்பதை உணர்த்துகிறான். இதன்வழி இறையன்பர்கள் வேற்றுமையுணர்ச்சி அற்றவர்களாதல் வேண்டும் என்பதும் அறிவுறுத்தப்படுகிறது.

*பிள்ளை மதிச்செஞ் சடைச்செருகும்*
*பெருமா னார்க்கும் உலகேழும்*
*பெற்ற தாய்க்கும் நீயருமைப்*
*பிள்ளை (சிற்றில்– 7)*

கங்கைக்கும் நெடியவன் தங்கைக்கும் ஒருமகன் (முத்தம் – 7)

*தொந்தித் தந்திக் கிளையாய் (தாலம் – 7.*
*கானக் குறப்பெண் குடியிருந்த*
*கன்னிப் புனத்துத் தினைமாவும்*
*கமழ்ந்தேன் றெளிவும் உண்டுசுவை*
*கண்டாய் (சிற்றில் – 6)*

முருகப்பெருமான் முதற்றமிழ்ச்சங்கத்தின் தலைமைப் புலவனாகித் தமிழ் ஆராய்ந்தான்.

*சங்கத் தமிழின் தலைமைப் புலவா (தாலம் – 7)*

சிவ பிரானது பேராற்றலையும் அருளையும் தெரிவிக்கிற பல கதைக் குறிப்புகள் இவ்விலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றுட் சில:

*—— துழாய்ச்*
*சருகு நாறு முடைத்தலையின்*
*தாம நாறு திரடிண்டோட்*
*டாதையாகும் கண்டுகண்டு (முத்தம் – 1)*
*முன்றக்கன் வேள்விக் களங்கொலைக் களமென்ன*
*முடியமரர் மொத்துண்ட நாள் (அம்புலி – 8)*

## வழிபாட்டு முறை

படிமம், கோவில் ஆகியவற்றைக் கடவுளாகக் கொண்டு வழிபடுதல், புனித நீராடல், தலப்பெருமை போன்றவை சமய வழிபாட்டில் தலையாயவை.

குமரப் பெருமானின் ஆறுமுகன் படிமக் குறிப்புகள் இப்பிள்ளைத்தமிழில் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன.

*திருமுகமொ ராறும் (வருகை – 5)*
*பன்னிரண்டு கண் (முத்தம் – 5)*
*காவரயுதக் கொடிவீரா (தாலம் – 9)*

வைத்தீசுவரன் கோவிலில் உள்ள விபூதியும் சித்தாமிர்தத் தடத் தீர்த்தமும் தீராத நோய்களையும் நீங்காத பேய்களையும் விலக்க வல்லவை.

# உன்னத உடல் நலம் உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனை திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உள்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம்: மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை.

மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

**மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்**

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை-625 107. போன்:536361-68
Fax: 536353 E-mail: mmhrc @ md2.vsnl.net.in


அன்பு அச்சகம், மதுரை–1 © 741116